1979 நவம்பர் 3]

வேண்டும் என்றும் அரசுக்கு நான் தெரிவித்திருக்கிறேன். அதற்கு இப்போது நிதி ஒதுக்கவில்லை என்று அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஆகவே, இதற்கு வெகு சீக்கிரத்தில் நிதி ஒதுக்கம் செய்ய முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :</u> பேரவைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டம் திருத்தணி தாலூகா பெத்தலகாட்டூர் ஏரி பெரிய ஏரியாக இருக்கிறது. இதன் மூலம் 1885 ஏக்கர் பாசனவசதி பெற்று வருகிறது. ஏரி நல்ல முறையில் இருக்கிறது, பழுதடையவில்லை. ஆகவேதான் இதற்கு நிதி எதுவும் ஒதுக்கம் செய்யவில்லை.

<u>திரு. ஆர். சண்முகம் :</u> பேரவைத் தலைவர் அவர்களே, ஏரிக்கரை பலப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் கண்மாய்கள் உடைபட்டு ஏரியில் வருகின்ற தண்ணீர், கண்மாய்கள் எல்லாம் பழுதுபட்டு இருப்பதால், தண்ணீர் எல்லாம் ஏரிக்கு வராமல் கழிந்துவிடுகிறது. ஆகவே, கண்மாய்களை எல்லாம் பழுது பார்த்து சீரமைக்கவேண்டும். அமைச்சர் அவர்கள் என்ன பதில் சொல்லுகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :</u> குறைபாடுகள் இருந்தால் அந்தக் குறைபாடுகள் நீக்கப்படும்.

<u>Enquiry into administration of Wakf Board.</u>

*Q. No. 99—THIRU R. UMANATH : Will the Hon. the Minister for Rural Industries be pleased to state :

(a) whether any enquiry into malpractices, mis-appropriation and fraudulent act committed by the wakf Board that was in existence prior to this Government took over has been made:

(b) if so, the findings thereof ;

(c) the estimated loss sustained by the Board due to lapses of the Board ; and

(d) the action taken by Government to recover the loss?

<u>மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :</u>

(அ) இல்லை.

(ஆ)
(இ) } இக்கேள்விகளுக்கு இடமில்லை.
( )

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இதே அவையில் முந்தைய கூட்டங்களில் இந்தப் பிரச்னை வந்தபோது, வக்போர்டு ஊழல்கள் சம்பந்தமாக விசாரணை செய்து தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது என்ன ஆயிற்று ?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவர் அவர்களே மூலக்கேள்வி இந்த அரசு ஆட்சிக்கு வந்த பின்னால் முதலில் இருந்த வாரியத்தின் மீது விசாரணை என்ன என்பது பற்றியதாகும். அதற்கும் முந்திய வாரியத்தின்மீதுதான் விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதாவது வாரியங்கள் நான்கு கட்டமாக அமைக்கப்பட்டன. இந்த ஆட்சி வருவதற்கு முன்னால் நான்காவது வாரியம் அமைக்கப்பட்டது. நடவடிக்கை எடுப்பதற்கு விசாரணை நடந்து கொண்டிருப்பது 3-வது வாரியத்தின் மீது.

திரு. எம். ஏ. லத்தீப் : அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்த மூன்றாவது வாரியத்தின் தலைவர் யார், உறுப்பினர்கள் யார் யார் இருந்தார்கள்?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: இந்த மூன்றாவது வாரியத்தின் தலைவராக டாக்டர் அம்ருத்தீன் அவர்கள்இருந்தார்கள். இவர் திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர். மேலும் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த ஹீராபாய் போன்றவர்கள் உறுப்பினர்களாக இருந்தார்கள். நான்காவது வாரியம் ஏற்பட்ட பிறகு மூன்றாவது வாரியத்தின் மீது புகார்கள் கொடுத்தார்கள். அதன் மீது புலன் விசாரணை செய்திருக்கிறார்கள்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, எமர்ஜென்ஸி காலத்தில் ஒரு ஸெல் இது பற்றி விசாரணை செய்து கொண்டிருந்தது என்று நான் அறிகிறேன். அந்த ஸெல் வக்போர்டு சேர்மென்-னையும், கமிட்டி மெம்பர்களையும் விசாரணை செய்யாமல் ரிப்போர்ட் சப்மிட் செய்ததாகத் தெரிகிறது. அது உண்மைதானா ? முன்னால் இருந்தவர்கள் தங்களின் நிலைமையை விளக்குவதற்கான சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை என்று சொல்லியிருப்பதை அரசாங்கம் அறியுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: ஆளுநர் ஆட்சியின் போது, இந்த விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இதன் மீது கொடுக்கப்பட்ட ரிப்போர்டிலிருந்து பல வழக்குகள் தேர்ந்தெடுக்கப்பட்டன. திரும்பவும் இதிலுள்ள உறுப்பினர்கள் எங்களுக்கு வாய்ப்பு கொடுக்கவில்லை என்று சொன்னதற்குப் பிறகு, இப்போது அரசின் சார்பில் விழிப்புணர்ச்சி—லஞ்சஒழிப்புத் துறையின் மூலமாக ஒவ்வொரு உறுப்பினரின் கருத்துக்களையும் கேட்டு புலன் விசாரணை செய்யவேண்டும் என்ற அடிப்படையில் மறுபரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. பிறகு அரசு இதன் மீது நடவடிக்கை எடுக்கும்.

1979 நவம்பர் 3]

(முற்பகல் 10.10)

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, டாக்டர் அம்ருதீன் அவர்கள் தலைமையில் இயங்கிய இந்த மூன்றாவது வாரியத்தில், திருவாளர்கள் காஜா முகைதீன், எம். பி., அவர்களும் அப்துல் வஹாப், எம். எல். சி. அவர்களும் இடம் பெற்றிருந்தார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவர் அவர்களே, இந்தக் குறிப்பில் அவர்களுடைய பெயர்கள் இருப்பதாகத் தெரியவில்லை. தனிக் கேள்வி போட்டால், பதில் சொல்கிறேன்.

Interest on loans for technocrats.

*Q. No 100 : Thiru N. KITTAPPA : Will the Hon. the Minister for Rural Industries be pleased to state—

(a) whether Tamil Nadu Industrial Investment Corporation Limited has cut the interest rates for loans issued to technocrats in this State ; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : (அ) ஆம்.

(ஆ) 1-11-1978ல் இருந்து, அறிவிக்கப்பட்ட பின்தங்கிய மாவட்டங்களில் தொழில்களை அமைக்கும் தொழில் நுட்ப வல்லுநர்களுக்கு அளிக்கும் நிதி உதவிக்கு வட்டி வீதம் $9\frac{1}{2}$ சதவீதத்திலிருந்து 8 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, வங்கிகளில் கடன் வழங்குகின்ற முறையைப்போல, எளிமையான முறையிலே விரைவிலே கடன் வழங்குவதற்கான நடவடிக்கையை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவர் அவர்களே, தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் கடந்த இரண்டாண்டு காலமாக கடன் மனுக்களைப் பரிசீலனை செய்வதில், காலதாமதத்தைத் தவிர்ப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறது. அது மட்டுமல்லாமல், 10, 15 பக்கங்களில் பூர்த்தி செய்யவேண்டிய கடன் மனுவை மாற்றி, குறைந்த பக்கங்களில், எளிமையான முறையில் பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருகின்றது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.